2023 மார்ச் 24]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 34, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்தரபாண்டியன், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

34—

வட்டாட்சியர் அலுவலகத்திற்குக் கட்டடம்

***59396—திரு. அ. சௌந்தரபாண்டியன்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) லால்குடி தொகுதி, லால்குடியில் உள்ள வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கின்றேன்.*

(அ) மற்றும் (ஆ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி சட்டமன்றத் தொகுதி, லால்குடியில் புதிய வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் கூடுதல் வசதியுடன் கட்டுவதற்குரிய மதிப்பீட்டு அறிக்கை பொதுப் பணித் துறையிலிருந்து பெறப்பட்டு, கூடுதல் தலைமைச் செயலாளர், வருவாய் நிருவாக ஆணையரிடமிருந்து கருத்துரு பெறப்பட்டு, நிதியொதுக்கீடு செய்யும்பொருட்டு பரிசீலிக்கப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வரை சுற்றோட்டத்தில் ஆணை பெறும்பொருட்டு, கோப்புகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. சுற்றோட்டத்தில் ஆணை பெறப்பட்டதும், மேற்படி வட்டாட்சியர் அலுவலகம் கட்டுவதற்கு வேண்டிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்தரபாண்டியன் அவர்கள், இருக்கையில் இல்லை. அதற்குப் பதிலாக அந்த மாவட்டத்தைச் சார்ந்த மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

[2023 மார்ச் 24

முற்பகல் 10–30

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய உயிரினும் மேலான அன்புத் தலைவர் கலைஞர் அவர்கள் காலத்திலே, அந்த வட்டாட்சியர் அலுவலகம் கட்டுவதற்கு நிதியொதுக்கப்பட்டுவிட்டது. இடம் வேண்டுமென்று கேட்டார்கள், இடமும் வாங்கிக் கொடுத்துவிட்டோம். ஆட்சி மாறிய காரணத்தால் அன்றைக்கு அது கட்டப்படவில்லை. இப்போது நீதிமன்றத்திற்கு 4 ஏக்கர் நிலம் வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். நீதிமன்றத்திற்கு அங்கிருந்து நிலம் எடுக்கப்பட்டாலும், முழு அளவிலே, வட்டாட்சியர் அலுவலகத்தை இருக்கிற இடத்திலேயே பெரிய அலுவலகமாகக் கட்டலாம். எனவே, இடம் தேர்வு செய்கின்ற பணி நடைபெற்று வருகிறது. நாங்கள் விரைவிலே இடத்தைத் தேர்வு செய்து தருகிறோம். நீங்கள் விரைவிலே வட்டாட்சியர் அலுவலகம் கட்டித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கருத்தை நான் என்னுடைய மனதிலே உள்வாங்கிக் கொண்டுள்ளேன். நிச்சயமாக, சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடு கலந்துபேசி, விரைவாக அந்தப் பணிகளை முடிக்கக்கூடிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.சி. சண்முகையா அவர்கள்.*

திரு. எம்.சி. சண்முகையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஒட்டப்பிடாரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் 56 வருவாய் கிராமங்களும், 6 குறு வட்டங்களும் செயல்பட்டு வருகின்றன. அந்தக் கட்டடமானது 1975 ஆம் ஆண்டு கட்டப்பட்ட கட்டடமாகும். அக்கட்டடம் கட்டப்பட்டு சுமார் 45 ஆண்டுகள் ஆகின்றன. அந்தக் கட்டடம் பழுதடைந்த நிலையில் உள்ளதாலும், அலுவலகப் பணிக்குப் போதுமான இட வசதி இல்லாததாலும், தற்போது*

TRUTH ALONE TRIUMPHS

2023 மார்ச் 24]

செயல்பட்டு வரும் வட்டாட்சியர் அலுவலகவளாகத்திற்குள் தேவையான அரசு நிலம் உள்ளதாலும், அனைத்து மக்களும் வந்து செல்வதற்கு வசதியாக இருக்கும் என்பதாலும், அந்த வளாகத்தின் அருகே புதிய வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் கட்டித் தர வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலுள்ள எந்தெந்த RDO அலுவலகங்கள், தாலுகா அலுவலகக் கட்டடங்கள் பராமரிப்பு இல்லாமல் இருக்கின்றன என்பது குறித்தும், எந்தெந்த கட்டடங்கள் பழங்காலக் கட்டடங்களாக இருக்கின்றன என்பது குறித்தும் அரசினுடைய ஆய்வில் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற ஊரும் எங்களுடைய ஆய்விலே இருக்கிறது. நிதிநிலைக்கேற்றாற்போல் அந்தப் பணிகளை நாங்கள் நிச்சயமாகச் செய்து கொடுப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. தாமோதரன் அவர்கள்.*

திரு. செ. தாமோதரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிணத்துக்கடவில் கிணத்துக்கடவு தாலுகா அலுவலகம் கட்டப்பட்டு 10 ஆண்டுகள் ஆகின்றன. அது அறநிலையத் துறைக்குச் சொந்தமான இடமாக இருப்பதால், அந்த இடத்தை குத்தகைக்கு எடுத்தவர் நீதிமன்றத்திற்குச் சென்றுவிட்டார். இப்போது வருவாய்த் துறையும், அறநிலையத் துறையும் வழக்கை முடிக்கின்ற நிலையில் இருந்தாலும்கூட, அவர் வேண்டுமென்றே வழக்கை இழுத்தடித்துக் கொண்டிருக்கிறார். அந்தக் கட்டடம் கட்டப்பட்டு 10 ஆண்டுகளானதால், பழுதடைந்த நிலையில் இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இதிலே தனிக் கவனம் செலுத்தி, அந்த வழக்கை விரைந்து முடித்து, அந்த அலுவலகத்தை திறப்பு விழா செய்வார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

[2023 மார்ச் 24

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிணத்துக்கடவு பிரச்சினை என்னுடைய கவனத்திலே இருக்கிறது.* CRA *அவர்களுடன் கலந்துபேசி உடனடியாக முடிக்க வேண்டும் என்றும், சம்பந்தப்பட்ட வழக்கறிஞர்கள் மத்தியில் பேசி, வழக்கை வேகப்படுத்தி, விரைந்து முடிக்க வேண்டும் என்றும் சொல்லியிருக்கிறேன். நிச்சயமாக விரைவில் அதை முடித்துக்கொடுப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 35, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.எஸ். மணியன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

35—

தொழிற்சாலை

***51536—திரு. ஓ.எஸ். மணியன்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேதாரண்யம் தொகுதியில் உற்பத்தியாகும் உப்பை மூலப்பொருளாகக் கொண்டு தொழில் தொடங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) வேதாரண்யம் தொகுதியில் உற்பத்தியாகும் உப்பை மூலப்பொருளாகக் கொண்டு தொழில் தொடங்குவதற்கான சாத்தியக்கூறுகள் தற்போது இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.எஸ். மணியன் அவர்கள்.*